# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.

## PROSECUTION OF WITNESS

## CC.No.142/2026

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **30.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused present.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW-2 : திரு.யோகபிரகாஷ். (காவல் உதவி ஆய்வாளர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது காவல் உதவி ஆய்வாளராக கிருஷ்ணாபுரம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். காவல் உதவி ஆய்வாளர் சோனியா அவர்கள் மகப்பேறு விடுப்பில் சென்றதால் அவருடைய கையெழுத்து நன்கு தெரியும் என்பதால் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 19.03.2025 வருடம் மாலை 20.00 மணிக்கு கிருஷ்ணாபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் சோனியா அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் அவர் மற்றும் SSI வேலன், HC சிவஞானம் ஆகியோர்கள் மது விலக்கு வழக்குகள் சம்பந்தமாக ரோந்து பணியில் இருந்த போது அவருக்கு கிடைத்த தகவலின் பேரில் அண்ணாமலைகொட்டாய் கிராமத்தில், Sri திரௌபதி அம்மன் மளிகை கடை பின்புறம் எதிரி வேடியப்பன் என்பவர் ஒரு கோணி பையில் மூட்டையுடன் இருந்தார். அவர்களை பார்த்து தப்பித்து ஓட முயற்சித்தார். அவரை பிடித்து விசாரித்தபோது 180 Ml அளவு கொண்ட Express பிராந்தி 30 பாட்டில்கள் இருந்தது. எதிரியை பிடித்து விசாரிக்கும்போது இருந்து அரசு அனுமதியின்றி மது பானங்களை விறப்னை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். எதிரியை கைது செய்து நிலையபிணையில் விடுவித்தார். மேற்கண்ட மதுபானங்களை சம்பவ இடத்திலேயே 20.15 மணிக்கு SSI வேலன், HC சிவஞானம் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜருடன் கூடிய அழித்தல் மகஜர் தயார் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் அதில் சாட்சியாக இருந்து SSI வேலன், HC சிவஞானம் என்பவரும் கையெழுத்திட்டார்கள். SSI வேலன் என்பவர் இது சம்மந்தமாக தனி அறிக்கையை SI சோனியாவிடம் கொடுத்தார். இவ்வழக்கின் எதிரி வேடியப்பன் மீது குற்ற வழக்கு எண் 32/2025 பிரிவு 4 (1) C TNP Act பதிவு செய்து குற்ற அறிக்கையினை தாக்கல் செய்தார். சம்மந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் பிற ஆவணங்களை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ2, தனி அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியிடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u> –**

ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் இருந்த கடைகளின் உரிமையாளர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அரசு மதுபான பாட்டில்களை எந்த கடையில் வாங்கினார்கள் என வரிசை எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சோதனை செய்த திரவத்தை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எந்த உயர் அதிகாரி உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டது என உத்தரவு நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அழிக்கப்பட்ட இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லை என்று என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகைப்படம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.30 16:02:13 +0530